[2002 மே 3

2. தகவல் கோரல்

(அ) உறுப்பினர் கொடுத்துள்ள அறிவிப்பு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன் அவர்கள்.*

திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 10 நாட்களாக, சோமனூர் மற்றும் பல பகுதிகளில் விசைத்தறி நெசவாளர்கள் வேலைநிறுத்தம் செய்து வருகிறார்கள். அவர்களுடைய நிலைமை மிகவும் மோசமாக இருக்கிறது. எனவே, ஒத்திவைப்பு அறிவிப்பை உங்களிடத்திலே கொடுத்திருந்தேன். அந்த ஒத்திவைப்பு அறிவிப்பை விவாதத்திற்கு எடுத்துக்கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அது எனது ஆய்வில் இருக்கிறது. சம்பந்தப்பட்டத் துறையிடம் விளக்கம் கேட்டு, பிறகு அதனை எப்போது எடுத்துக்கொள்வது என்று சொல்கிறேன்.*

(ஆ) காவிரி நீர் 2001-2002-ல் பெறப்பட்ட அளவு

திரு. ஜி. பழனிசாமி: *தலைவர் அவர்களே,.....*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *திரு. ஜி. பழனிசாமி.*

திரு. ஜி. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கர்நாடகாவினுடைய மாண்புமிகு அமைச்சர் எச்.எம். பட்டேல் அவர்கள் —நம்முடைய மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களுடைய பதிலுரையின்போது கர்நாடகாவிலிருந்து சரியாக தண்ணீர் வழங்கப்படவில்லையென்று கூறினார்கள்—தற்போது 185 டி.எம்.சி. தண்ணீரை நாங்கள் வழங்கிக் கொண்டிருக்கிறோம், அமைச்சரவர்கள் தவறான தகவலை அவையிலே அறிவித்திருக்கிறார் என்று இந்த நேரத்திலே தெரிவித்திருக்கிறார். அவர் சொல்வது உண்மையா? மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே சட்டமன்ற கூட்டத் தொடரிலே, பொதுப் பணித் துறை மானியக் கோரிக்கையிலே பதில் அளித்துச் சொன்னது உண்மையா? இதைத் தங்கள் மூலமாக அமைச்சர் அவர்களிடத்தில் விளக்கம் பெற விரும்புகிறோம். அப்படி கொடுக்காத தண்ணீர் பற்றிய விவரங்களுக்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் அளிப்பார்களா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.*

2002 மே 3]

***மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கர்நாடகாவின் மாண்புமிகு நீர்ப்பாசனத் துறை அமைச்சர் இன்று பத்திரிகையின் வாயிலாக அளித்த செய்தியை நானும் பார்த்தேன். அவர் சொன்னது போல, மேட்டூரில் நாம் அந்த அளவிற்கு நீர் பெறவில்லை என்பதனை இந்த மன்றத்திற்குச் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். நடுவர் மன்றத்தினுடைய தீர்ப்பின்பிரகாரம், நம்முடைய மேட்டூர் அணையில் 3-5-2002 அன்றைய நிலவரப்படி, 203.20 டி.எம்.சி. நீர் பெறப்பட வேண்டும். அது ஒவ்வொரு மாதம்வாரியாகவும், மாதத்தில் பெறுகின்ற நீர் ஒவ்வொரு வாரம் வாரியாகவும் நம்முடைய மேட்டூர் நீர்த்தேக்கத்திற்கு வந்து சேர வேண்டுமென்று நடுவர் மன்றத்தின் தீர்ப்பில் குறிப்பிட்டுச் சொல்லப்பட்டிருக்கிறது. ஜூன் மாதத்திலிருந்து செப்டம்பர் மாதம் வரை 2001 ஆம் ஆண்டு 137 டி.எம்.சி. நீர் நம்முடைய மேட்டூர் நீர்த் தேக்கத்திற்கு அவர்கள் தர வேண்டும். ஆனால், 73.76 டி.எம்.சி. தண்ணீர்தான் வந்து சேர்ந்திருக்கிறது. அதேபோல, அக்டோபரிலிருந்து டிசம்பர் 2001 வரை 56.59 டி.எம்.சி. நீர் பெறப்பட வேண்டும். ஆனால் கூடுதலாக அந்த மாதம் 77.51 டி.எம்.சி. நீர் வந்து சேர்ந்திருக்கிறது.

முற்பகல் 11-30

ஜனவரி மற்றும் பிப்ரவரி மாதங்களில் 2002 ஆம் ஆண்டு 4.68 டி.எம்.சி. நீர் வந்து சேர்ந்திருக்க வேண்டும். ஆனால், 4.05 டி.எம்.சி. தான் வந்து சேர்ந்திருக்கின்றது. 2002 மார்ச் மாதம் 2.40 டி.எம்.சி. நீர் வந்து சேர்ந்திருக்க வேண்டும். 2.62 டி.எம்.சி. நீர் வந்து சேர்ந்திருக்கின்றது. ஏப்ரல் மாதம் 2002 அன்று 2.32 டி.எம்.சி. நீர் வந்து சேர்ந்திருக்க வேண்டும். 2.58 டி.எம்.சி. நீர் வந்து சேர்ந்திருக்கின்றது. ஆக மொத்தம் நாம் பெறவேண்டிய நீரின் அளவு ஒரு வருடத்தில் 203.20 டி.எம்.சி. அளவு. ஆனால், நமக்கு 160.67 டி.எம்.சி. நீர்தான் வந்து சேர்ந்திருக்கிறது. ஆக 42.53 டி.எம்.சி. நீர் குறைவாக இந்த ஆண்டு வந்து சேர்ந்திருக்கிறதுதான் உண்மையான நிலை என்பதனை இந்த மாமன்றத்திற்கு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். இந்த மாதிரியான குழப்பங்களினால், அவர்களுடைய releasing point-லிருந்து நமக்கு வந்து சேரவேண்டிய entry point-ல் கணக்குகளில் வித்தியாசம் வருகின்றது. அந்த அளவைக் கண்காணிப்பதற்கும், அதனை நடைமுறைப் படுத்துவதற்கும் 'காவிரி ஆணையம்' என்று இருக்கின்றது. அந்த ஆணையத்தின் வாயிலாக இந்த மாதிரியான குறைகளைச் சரி செய்ய,

ஓர் அதிகாரம் உள்ள ஆணையம் தேவை என்றுதான் நாம் வலியுறுத்திச் சொல்லிக்கொண்டு இருக்கின்றோம். அதற்குத்தான் நாம் இன்று உச்ச நீதிமன்றத்தையும் நாடியிருக்கிறோம். இந்த ஆண்டில் மட்டும் 42.53 டி.எம்.சி. குறைவாக தண்ணீர் பெறப்பட்டிருக்கிறது. இடையில் அந்த நீர் காவிரி பாசனப் பகுதிகளுக்குச் செல்லவேண்டிய ஒரு சூழ்நிலை அங்கே இருக்கின்றது. ஆக, நடுவர் மன்றத்தினுடைய தீர்ப்பின்படி மேட்டூர் நீர்த்தேக்கத்தில் நாம் பெறப்போகின்ற நீரைத்தான் கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று நடுவர் மன்றத்தின் தீர்ப்பு இருக்கிறது. அந்தத் தீர்ப்பை ஒட்டித்தான் நாம் நீரைக் கேட்டுக்கொண்டிருக்கின்றோம். அதை அதிகாரம் உள்ள ஆணையம் மூலம் செயல்படுத்தித் தரவேண்டுமென்றுதான் நாம் இன்றையதினம் உச்ச நீதிமன்றத்தையும் நாடி இருக்கின்றோம் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

***திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் அவருடைய பதிலிலே குறுக்கிடவில்லை. ஆனால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவிக்கின்றபோது ஓர் ஆண்டுக்கு நமக்குத் தரவேண்டிய நீர் 203.20 டி.எம்.சி. என்று சொல்கிறார். 205 டி.எம்.சி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 205 தான்.

திரு. துரைமுருகன்: 205 தான். ஆனால் மாண்புமிகு அமைச்சர் தெரிவிக்கின்றபோது 203.20 டி.எம்.சி. என்கிறார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, இல்லை 205 டி.எம்.சி.

திரு. ஜே. ஹேமச்சந்திரன்: தலைவர் அவர்களே.....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: என்ன ஹேமச்சந்திரன்?

திரு. ஜே. ஹேமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் 8-4-2002 அன்று......... (மணியடிக்கப்பெற்றது)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, இல்லை. என்னுடைய ஆய்வில் இருக்கின்றது. அறைக்கு வாருங்கள்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நடுவர் மன்றத்தின் தீர்ப்பின்படி 205 டி.எம்.சி. என்றுதான் உத்தரவு இருக்கின்றது. அளவில் 2 டி.எம்.சி. வேறுபாடு இருக்கின்றது. அதில் நாம் 6 டி.எம்.சி. பாண்டிச்சேரி மாநிலத்திற்குத் தரவேண்டுமென்று இருக்கின்றது.